### தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து – ஆட்சி இன்னும் அமைக்காத நிலையில்,

# பி.எம். சிறீ திட்டம் என்று மும்மொழிக் கொள்கையைத் திணிப்பதா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மே 8-

தமிழ்நாட்டில் தேர்தல் முடிந்து, அரசு அமைக்கப்படாத நிலையில், பி.எம். சிறீ. திட்டம் என்று மும்மொழிக் கொள்கையைத் திணிப்பதா? தமிழ்நாடு அதனை ஒருபோதும் ஏற்காது என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் முடிந்து, இன்னும் ஓர் அரசு பொறுப்பேற்காத நிலையில், ஒன்றிய அரசு தனது மும்மொழித் திட்டத்தைத் திணிக்கும் பி.எம்.சிறீ. திட்டத்தை ஏற்கச் சொல்லி நெருக்கடி தருவது கண்டிக்கத்தக்கதாகும்.

**மு.க.ஸ்டாலின் மிக உறுதியாக நின்று மறுத்தார்!**

பி.எம்.சிறீ. திட்டத்தை ஏற்றால் தான், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசுக்குத் தர வேண்டிய கல்விக்கான நிதி ரூ.2,152 கோடி வழங்கப்படும் என்று முன்பு ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியபோதே, தமிழ்நாட்டில் கடும் கண்டனம் எழுந்தது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மிக உறுதியாக இதனை மறுத்தார். '10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும் ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம்' என்று சுயமரியாதையுடன் நின்றார். மாணவர்கள், தர்மேந்திர பிரதானுக்குக் கருப்புக் கொடி காட்டவிருக்கின்றனர் என்று அறிந்து, தனது பயணத்தை ரத்து செய்தார் என்பது வரலாறு.

**பா.ஜ.க.வால் ஒருபோதும் தமிழ்நாட்டை ஆள முடியாது!**

இந்நிலையில் மீண்டும் அதனை வலியுறுத்தி, தமிழ்நாட்டில் ஹிந்தியைத் திணிக்க வழிவகுக்கும் பி.எம்.சிறீ. திட்டத்தில் கையொப்பமிட நெருக்கடி கொடுக்கிறது - ஒன்றிய ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க அரசு! ஒன்று ஹிந்தித் திணிப்பு இல்லையேல் நிதி மறுப்பு என்று தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சியைத் தடுக்க, நிதி நெருக்கடி மூலம் தமிழ்நாட்டைப் பணிய வைக்கலாம் என்று ஒன்றிய பி.ஜே.பி. அரசு கருதுகிறது. பா.ஜ.க.வால் ஒருபோதும் தமிழ்நாட்டு மக்களை நேரடியாக ஆள முடியாது.

தமிழ்நாடு ஒருபோதும் இதற்குப் பணியாது. தமிழ்நாட்டு மாணவர்களும் இதனை ஏற்க மாட்டார்கள். கடும் போராட்டங்களை மாணவர்களிடம் திணிக்க ஒன்றிய பா.ஜ.க. அரசு முயலக் கூடாது. இல்லையெனில், அதற்குரிய விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

சந்தடி சாக்கில் கந்த(க)ப் பொடி தூவ நினைக்கிறதா ஒன்றிய பா.ஜ.க. அரசு? தமிழ்நாடு பொங்கி எழுவது உறுதி!

இவ்வாறு அவ்வறிக்கையில் - திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.





நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் ஆலந்தூர் தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் தா.மோ.அன்பரசன் குன்றத்தூர் ஒன்றிய கோவூர் ஊராட்சியில் தேர்தல் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கும் இயக்கத் தோழர்களுக்கும் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தேமாதரம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# வெங்கத்தூர் - போளிவாக்கம் ஊராட்சியில் நீர்மோர் பந்தல் திறப்பு!

## தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்!

திருவள்ளூர், மே 8:

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் கோடை வெப்பத்தின் தாக்கத்தை தணிக்க பொதுமக்களுக்கு நீர் மோர்பந்தல் திறக்கப்படும் என மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் தெரிவித்திருந்தார். அதன்படி

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வெங்கத்தூர் ஊராட்சி, மற்றும் போளிவாக்கம் ஊராட்சியில் நீர், மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன்படி வெங்கத்தூர் ஊராட்சி மணவாளநகரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன் தலைமை தாங்கினார். கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாநில விவசாய அணி நிர்வாகி ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், பிரகாஷ் ஞான ஒளி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் கலந்து கொண்டு நீர், மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு குடிநீர், மோர், இளநீர், தர்பூசணி, கிருணி பழம், குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

முன்னதாக அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதில் மாவட்ட நிர்வாகிகள் நந்தகோபால், பி. ஆர்.பிரபாகரன், பாலசுப்ரமணி, ராஜேந்திர குமார், கா.மு.தயாநிதி, தி.ஆ.கமலக்கண்ணன், மகளிர் அணி நிர்வாகிகள் வசந்தி, பிரேமா, அன்னபூரணி, ஒன்றிய நிர்வாகிகள் பாபு, ஒன்றிய துணை செயலாளர் செங்குட்டுவன், எம். கே.ரவி, லோகநாயகி, ஒன்றிய பொருளாளர் சி. ஆர். குமரன், மாவட்ட பிரதிநிதி நித்யானந்தம், திலீப்குமார், இளைஞர் அணி நிர்வாகிகள் மோகனசுந்தரம், கார்த்திக் மணி, சி.ஆர்.மணிகண்டன், ராம்கி, மாணவர் அணி நிர்வாகிகள் ஜானகிராமன், கார்த்திக், சதீஷ் பாஸ்கர் உட்பட மாவட்ட ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து போளிவாக்கம் ஊராட்சியில் நீர், மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பி. கே.நாகராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி. ராஜேந்திரன் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து மோர் இளநீர் தர்பூசணி பழம், கிருணி பழம் ஆகியவற்றை வாங்கினார்.

இதில் நிர்வாகிகள் எஸ். பாலசுப்பிரமணி, வி.பாபு, பி. ஜானகிராமன், கே.பாலாஜி, கிளைக் கழக நிர்வாகிகள் ஜி.தரணி, எஸ்.சண்முக ஆனந்தன், எம்.மாரி, எஸ்.லோகநாதன், ஆர். புருஷோத்தமன், எஸ். முனிவேல், ஜி.பாஸ்கர், ஜி.அன்பு, டில்லிபாபு, செல்வராஜ், சரவணன், சுதாகர், குரு டி.முருகன், ஆர் நாகராஜன், இளைஞர் அணி பி.கே.என். லோக கிருஷ்ணன், சோமேஸ்வர் உட்பட ஒன்றிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில்

# மயிலை த.வேலு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கிறார்!

## மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி அறிவிப்பு!

சென்னை, மே 8-

இதுகுறித்து பகுதிச் செயலாளர் நந்தனம் மதி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதியில் மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு இன்று 8.5.2026 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் மயிலை மேற்கு பகுதி 121வது, 121 அ, 122 வது, 122 அ, 123வது, 123 அ ஆகிய வட்டங்களில் நன்றி தெரிவிக்கிறார்.

அதன் விவரம் வருமாறு

122 அ வட்டம் : ராதா கிருஷ்ணன் சாலை தொடங்கி - பக்ஸ் ரோடு , ஆஸ்டின் நகர் , பைக்ராப்ஸ் நகர், கணேசபுரம்,

122 வது வட்டம் : டேங்க் பண்ட் சாலையில் தொடங்கி ஜோதி தோட்டம் , அன்பு காலனி, SM நகர் , ரங்கூன் தெரு VOLTAS பின்புறம் , ஆலையம்மன் கோவில் தெரு , ஆழ்வார் பேட்டை மெயின் தெரு, கே. பி. தாசன் சாலை , திருவள்ளுவர் சாலை

123 வது வட்டம் : திருவள்ளுவர் சாலை, ஜெகன் நாதன் தோட்டம், எல்டாம்ஸ் சாலை , காமராஜர் சாலை , முதலியாண்டான் தோட்டம் , பெரியார் சாலை , ராமலிங்கீஸ்வரர் தெரு , சீதாம்மாள் பிரதான சாலை, பக்தவத்சன் தெரு , கன்னியபுரம், ராமசாமி நாயக்கர் தெரு, 'ரீ ராம் காலனி , பீமன்ன பிரதான சாலை , ரங்கா ரோடு,

123 அ வட்டம் : கன்னி கோவில் மேடு பள்ளம் , குருபுரம் நைனான் தெரு, படவட்டான் தெரு, சுப்புராயன் சாலை, விசாலாட்சி தோட்டம், கால்வாய் கரை சாலை, கபாலி தோட்டம், பல்லக்கு மாநகர்,

121 வது வட்டம் : வீர பெருமாள் கோயில் தெரு , அப்பர்சாமி தெரு, P S சிவசாமி சாலை, ராயப்பேட்டை நெடுசாலை , கணேசபுரம், சிட்டி சென்டர்

121 அ வட்டம் : ரோட்டரி நகர் , மாயாண்டி காலனி, துவாரக நகர், மெக்கா புரம், லாயிஸ் ரோடு, வி. பி ராமன் சாலை, வட்ட கழக அலுவலகம் முடிவு .

இதில் மாநில , மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் , அனைத்து அணிகளின். மாவட்ட மாநில பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், BLA2 மற்றும் BLC அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி அறிவித்துள்ளார்.

### ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகிய

# 7 எம்.பி.க்களை பதவி நீக்கம் செய்ய வேண்டும்!

## குடியரசுத் தலைவரிடம் – பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் வலியுறுத்தல்!

புதுடில்லி, மே 8-

பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சியி லிருந்து விலகி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்த 6 நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களை (எம்பிக்கள்) உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த மாதம் 24ஆம் தேதி, ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த 7 பேர் அக்கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்தனர். இவர்களில் 7 பேர் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

5.5.2026 அன்று குடியரசுத் தலைவரைச் சந்தித்த முதலமைச்சர் பகவந்த் மான், கட்சி மாறியவர்களின் பதவியை ரத்து செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்காக ஆம் ஆத்மி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்ட அதிகாரப்பூர்வ ஆவணங்களையும் அவர் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்தார். இதற்கிடையில், ஆம் ஆத்மியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த எம்பி ராகவ் சதா, பஞ்சாப் அரசு தங்களைப் பழிவாங்கும் நோக்கில் செயல்படுவதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

அரசு இயந்திரம் அத்துமீறல்: "ஆம் ஆத்மி அரசு இயந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, கட்சி மாறியவர்களைக் குறிவைத்து துன்புறுத்துகிறது," என்று ராகவ் சதா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை உறுப்பினர்கள் முறையீடு:

ராகவ் சதா மற்றும் அவருடன் மூன்று பேர் குடியரசுத் தலைவரைச் சந்தித்து, தங்கள் மீது எடுக்கப்பட்டு வரும் அரசியல் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கைகள் குறித்து மனு அளித் தனர். இந்த விவகாரம் பஞ்சாப் அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# தமிழ்நாடு வேளாண்மை பல்கலை. மாணவர் சேர்க்கை!

## ஜூன் 8ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்!

கோவை, மே 8 -

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இளங் கலை அறிவியல் மற்றும் வேளாண் தொழில் நுட்ப படிப்புகளுக்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இதுதொடர்பாக, வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: -

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்மை பிரிவுக்கும் ஒரே இணையதள விண்ணப்பம் வழியாக இளமறிவியல் மாணவர் சேர்க்கை நடை பெறுகிறது. HTTP://TNAU.UCANAPPLY.COM என்ற ஒருமித்த இணையதள விண்ணப்பத்தின் மூலம் வரும் ஜூன் 8ம் தேதி வரை பூர்த்தி செய்து விண்ணப் பிக்கலாம்.

மாணவர் சேர்க்கைக்கான வழிமுறைகள், கலந்தாய்வுக்குரிய தேதி மற்றும் செயல்முறைகள் அனைத்தும் உடனுக்குடன் இணையத்தில் வெளியிடப்படும். இளமறிவியல் வேளாண்மை, தோட்டக்கலை படிப்புகளுக்கு தமிழ் வழியிலும் விண்ணப்பிக்கலாம். வனவியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து உணவு முறை, பட்டு வளர்ப்பு, வேளாண் வணிக மேலாண்மை ஆகிய இளமறிவியல் பாடங்களும், வேளாண்மை தொழில்நுட்பக் கல்வி பாடப்பிரிவுகளான வேளாண் பொறியியல், உணவு தொழில் நுட்பம், உயிரித் தொழில்நுட்பம், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல், உயிரித் தகவலியல் மற்றும் வேளாண்மை தகவல் தொழில்நுட்பம் ஆகிய 14 இளமறிவியல் பட்டப்படிப்புகளுக்கு ஒரேயொரு இணைய வழி விண்ணப்பம் மட்டும் போதுமானது.

**சேர்க்கை எண்ணிக்கை:** வரும் கல்வி யாண்டில் உறுப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான எண்ணிக்கை 2,516 ஆகவும், இணைப்பு கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை 4,736 ஆகவும் இருக்கும்.

இதில் அரசாங்க இடஒதுக்கீடு 3,051 மற்றும் மேலாண்மை இடஒதுக்கீடு 1,685 ஆகும். சிறந்த விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள், மாற்றுத் திறனாளிகள், அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவீதம், தொழில் முறை கல்வி பாடப்பிரிவு, மூன்றாம் பாலினத்தவர் மற்றும் அயலக வாழ் தமிழர்கள் என சிறப்பு ஒதுக்கீட்டுக்கான சேர்க்கை நடை பெறும்.

விண்ணப்பக் கட்டணம் பொதுப் பிரிவு, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு ரூ.600, ஆதிதிராவிடர், அருந்ததியர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.300 ஆகும்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற செல்போன் எண்களிலும், UGADMISSIONS@TNAU.IN என்ற மின்னஞ்சல் மூலமாகவும், வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு அறியலாம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளமறி வியல் வேளாண்மை, வேளாண்மை சுயசார்பு மற்றும் தோட்டக்கலை பிரிவில் 340 இடங்கள் உள்ளன.

இந்த பாடங்களுக்கான விவரங்களை 9865703537, 9442029913 என்ற செல்போன் எண்களிலும், AGRIDEAN2015@GMAIL.COM மூலமாகவும் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்குப் பகுதியில் வாக்காளர்களுக்கு நேற்று (7.5.2026) மாலை 5 மணி முதல் 172 அ வட்டம் காமராஜபுரத்தில் தொடங்கி கோட்டூர்புரம் சித்ராநகர் வரை மா.சுப்பிரமணியன் நன்றித் தெரிவித்தார். இந்நிகழ்வில் பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், வட்ட கழக செயலாளர் வி.முருகன், நேருநகர் எஸ்.பாட்சா, தா.மோகன்குமார், என்.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், ஆ.வரதன், க.மணி, கோட்டூர்புரம் சண்முகம் உள்ளிட்ட மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியினர், தி.மு. கழக நிர்வாகிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.




திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய ஒன்றிய திமுக சார்பில் வெங்கத்தூர் ஊராட்சியில் மற்றும் போலிவாக்கம் ஊராட்சியில் மாவட்டத் தலைவர் திராவிட பக்தன், தலைமையில் ஒன்றிய செயலாளர் கா.அரிகிருஷ்ணன், ஏற்பாட்டில் தலைமை செயற்குழு உறுப்பினரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், கலந்துகொண்டு நீர் மோர் பந்தலை திறந்து வைத்து இதனைத் தொடர்ந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மற்றும் பொதுமக்களுக்கு குடிநீர் மோர் இளநீர் தர்பூசணி கிருனி பழம் குளிர்பானங்கள் ஆகியவற்றை வழங்கினார் உடன் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் எஸ். மகாலிங்கம், மோ. ரமேஷ், பிரகாஷ் ஞான ஒளி, மற்றும் நிர்வாகிகள் பி.கே. நாகராஜ், பி.ஆர். பிரபாகரன், நந்தகோபால், பாலசுப்பிரமணி, ராஜேந்திரகுமார்,சி.ஆர். குமரன், கொப்பூர் திலிப் குமார், கே.ஏ.சத்யா, வசந்தி பிரேமா, அன்னபூரணி, செங்குட்டவன் எம் கே ரவி லோகநாயகி, நித்தியானந்தம், மோகனசுந்தரம், ராம்கி, கார்த்திக் மணி,சதீஷ் பாஸ்கர், சி.ஆர் மணிகண்டன் மற்றும் பலர் உள்ளனர்.